


சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி – நிதிநிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., கோ.வி.லெனின் சிறப்புரையாற்றி நலஉதவிகள் வழங்கினர். பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, ஜி.ஆர்.இராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக்குமார், பா.பாக்கியதாஸ், அகல்யாவிஸ்வநாதன், ஜி.முருகையன், அ.நாகநாஜன், எஸ்.ஆர்.ராஜா சுரேஷ்குமார், தினேஷ்மாணிக்கம், சீ.வி.திவான்குமார், தா.தாமு, ஆர்.ராமு, இ.ராஜேஷ், கௌதம் சிவா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு – கலைஞர் தந்த ரூ.5 கோடி வைப்புநிதி 25 கோடியாக உயர்ந்துள்ளது!

# 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கல்வி - மருத்துவத்திற்கு ரூ. 1.89 கோடி செலவு!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஏப்.16-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எச்ஐவி/எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வைப்பு நிதி ரூ.5 கோடி தந்தது, தற்போது ரூ.25 கோடியாக உயர்ந்திருக்கிறது என்றும் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி மற்றும் மருத்துவத்திற்கு (2024-25) ஆம் ஆண்டில் மட்டும் ரூ.1.89 கோடி செலவிடப்பட்டிருக்கிறது என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் நேற்று (15.04.2025) கேள்வி நேரத்தின்போது குறிப்பிட்டார்.

கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு, அமைச்சர் மா.சுப்பிரமணியன், "கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியைப் பொறுத்தவரை இதுவரை தொடர்ந்து கூட்டு மருந்து சிகிச்சை எடுத்து வரும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றாளர்கள் 446 பேர் இருக்கிறார்கள். இந்த 446 பயனாளிகளில், 364 பேருக்கு ஏற்கெனவே, அரசால் வழங்கப்படுகின்ற பல்வேறு திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது. வருவாய்த்துறையின் மூலம் உழவர் பாதுகாப்புத் திட்ட விதிகளின்படி, எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எச்.ஐ.வி தொற்றாளர்களுக்கு சிறப்பு ஓய்வூதிய திட்டம் எதுவும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் செயல்படுத்தப்படுவதில்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை HIV/AIDS தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 1,57,908. HIV-யால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க 76 கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. கூட்டு மருத்துவ சிகிச்சையில் இருக்கிற பயனாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை 1,41,341. தமிழ்நாடு முதலமைச்சருடைய வலியுறுத்தலுக்கேற்ப இன்றைக்கு இந்த கூட்டு மருத்துவ சிகிச்சை என்பது விரிவுப்படுத்தப்பட்டிருக்கிறது. சமூக நலத்துறையால் வழங்கப்படுகிற பாதுகாப்புத் திட்டங்களைப் பொறுத்தவரை முதியோருக்கான உதவித்தொகை ரூ.1000/-த்திலிருந்து ரூ.1200 ஆகவும், மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை ரூ.1000/-த்திலிருந்து ரூ.1500/-ஆகவும், 75 விழுக்காடு பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2000 என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தித் தந்து அந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரை ART (ANTI-RETROVIRAL THERAPY) மையங்களில் 3372 பேரும், தென்காசி மாவட்டத்தைப் பொறுத்தவரை ART (ANTI-RETROVIRAL THERAPY) மையங்களில் 1224 பேரும் ஆக மொத்தம் 4596 பேர் HIV தொற்றாளர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின்கீழ் கூட்டு மருத்துவ சிகிச்சையின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருப்பதைபோல இந்த துறையின் சார்பில் பிரத்யேகமாக நிதியுதவி வழங்குகிற திட்டம் எதுவும் இல்லை என்றாலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2009ஆம் ஆண்டு எச்ஐவி/எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ரூ.5 கோடி வைப்பு நிதியாக தந்து அறக்கட்டளை ஒன்றை தொடங்கி வைத்தார்கள். அந்த நிதி தற்போது ரூ.25 கோடியாக உயர்ந்திருக்கிறது. ரூ.25 கோடியாக உயர்ந்திருக்கிற அந்த திட்டத்தில் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி மற்றும் மருத்துவத்திற்கு 2024-25ஆம் ஆண்டில் மட்டும் 7618 குழந்தைகள் பயன்பெறுகிற வகையில் ரூ.1.89 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. மன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று எதிர்காலத்தில் அந்த குழந்தைகளுக்கும் மாதந்தோறும் உதவித்தொகை வழங்குகிற திட்டம் அமல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சிறுபான்மையினர்களின் பாதுகாப்பு அரண் என்று கூறிக்கொள்ளும் அரசு என்று சொன்னார். உண்மையில் சிறுபான்மையினரின் பாதுகாப்பு அரசு இது என்பதை ஒட்டுமொத்த தமிழர்களும் உணர்வார்கள். அந்தவகையில் தென்காசியைப் பொறுத்தவரை ஒரு மருத்துவக்கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் மருத்துவக்கல்லூரி கிடைக்கும்போது, இப்போது ஒவ்வொரு மருத்துவக்கல்லூரியாகத்தான் CATHLAB என்று சொல்லக்கூடிய இருதய சிகிச்சை கருவிகளைப் பொருத்தி வருகிறோம். கடந்த ஆண்டு இரண்டு மருத்துவக்கல்லூரிகளில் வைக்கப்பட்டது. அதற்கு முந்தைய ஆண்டு இரண்டு மருத்துவக்கல்லூரிகளில், எதிர்வரும் ஆண்டுகளில் மருத்துவக்கல்லூரி தொடங்கப் பட்டதற்கு பிறகு தென்காசியில் ஒரு CATHLAB வசதி ஏற்படுத்தித் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று குறிப்பிட்டார்.

## ஜி.எஸ்.டி. வரி விதிப்பு குறித்து பா.ஜ.க. உறுப்பினர் கருத்து! மறுத்து

# அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் விளக்கம்!

### சட்டப்பேரவையில் விவாதம்!

**சென்னை, ஏப்.16-**

**சட்டப்பேரவையில் பேசிய பா.ஜ.க. உறுப்பினர் நயினார் நாகேந்திரன், ஜி.எஸ்.டி. வரி விதிப்பு குறித்து தெரிவித்த கூற்றை மறுத்து, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் விளக்க மளித்தார்.**

அவர் குறிப்பிட்டதாவது:

உறுப்பினர் நயினார் நாகேந்திரன் அவர்கள் தவறான கணக்கை இங்கே பதிவு செய்திருக்கிறார். அதை நான் திருத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

GSTயில் 50 சதவிகிதம், 50 சதவிகிதம் எல்லாம் கிடையாது. சில பொருட்களுக்கு SGST, IGST, சில பொருட்களுக்கு SGST, CGST. வெவ்வெறு GST வெவ்வெறு இடத்தில் பொருந்தும்.

100 சதவிகிதம் CGSTயில் COLLECT செய்கிற பணம் எல்லாம் நேர்முக வரியோடு கலந்து மொத்த ஒன்றிய அரசாங்கத்தினுடைய நிதிச் சேர்க்கையில் CESS, SURCHARGE என்று ஒரு 25 சதவிகிதத்தை கழட்டிவிட்டு பாக்கியிருப்பதில் 42 சதவிகிதத்தை மாநிலத்திற்குக் கொடுக்கிறேன் என்று சொல்லி, அதில் நான்கு சதவிகிதம் நமக்கு வருகிறதேதவிர, இவர் சொன்ன கணக்கெல்லாம் எந்தக் கணக்கிலும் சேராது.

50 PERCENTல் 29 PERCENT எல்லாம் வருவதே கிடையாது. அது முற்றிலும் தவறான கணக்கு. அந்த கணக்கை சேர்த்துக்கொள்ளக்கூடாது ஒன்று.

இரண்டாவது GST கவுன்சிலில் வாக்களிக்கிற முறையைப் பார்த்தால் அது பேருக்காக உறுப்பினராக இருக்கிறோமே தவிர, 33 சதவிகித ஒட்டு ஒன்றியத்துடனும், பாக்கி 66 சதவிகிதம் 31 மாநிலத்திற்கு ஆளுக்கு இரண்டு சதவிகிதம். அதாவது இன்றைக்குச் சொல்கிறார்கள் மக்கள் தொகை அதிகரித்திருந்தால் கூடுதல் MP இருக்க வேண்டுமென்று, ஆனால், அந்தக் கவுன்சிலில் நீங்கள் ஐந்து பைசாவுக்கு வரி செலுத்தினாலும், 5,000 கோடி செலுத்தினாலும் ஒரே அளவுக்கு ஓட்டுப்போட்டு, ஒரு மாநிலத்திற்கு ஒரு ஓட்டு என்று உலகத்தில் இல்லாத ஒரு முறையைக் கொண்டு வந்தது இந்த GST COUNCIL. அதனால் இதை வைத்து கூட்டாட்சித் தத்துவத்திற்கு சிறந்த உதாரணம் என்று பேசவே கூடாது.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

# சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# குளித்தலை எம்.கந்தசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப். 16 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

குளித்தலை சட்டமன்றத் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.கந்தசாமி அவர்கள் நேற்று முன்தினம் (14-04-2025) மறைந்தார் என்று அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

கந்தசாமி அவர்கள் பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.கழகம் முதன்முதலாக ஆட்சியைப் பிடித்து இந்திய அரசியல் களத்தில் மிகப் பெரும் மாற்றத்துக்கு வித்திட்ட 1967-ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத்தேர்தலிலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் எதிர்கொண்டு வரலாறு காணாத வெற்றியைப் பெற்ற 1971-ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும் குளித்தலை தொகுதியில் வென்ற பெருமைக்குரியவர் ஆவார்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், குளித்தலை தொகுதி கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# அம்பேத்கர் - மொழிவாரி மாநிலங்களுக்கு எதிர்ப்பானவர் அல்ல!

## சட்டப்பேரவையில் – பா.ஜ.க. உறுப்பினரின் கூற்றை மறுத்து – டாக்டர் நா.எழிலன் விளக்கம்!

சென்னை, ஏப்.16-

சட்டப்பேரவையில் பா.ஜ.க. உறுப்பினர் நயினார் நாகேந்திரன் பேச்சின் நடுவே குறுக்கிட்டு விளக்கமளித்த ஆயிரம் விளக்கு தொகுதி கழக உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன், "அண்ணல் அம்பேத்கர் மொழிவாரி மாநிலங்களுக்கு எதிரானவர் அல்லர்" என்று குறிப்பிட்டார்.

டாக்டர் நா.எழிலன் பேசியதாவது :-

பா.ஜ.க-வின் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அண்ணல் அம்பேத்கர் மொழிவாரி மாநிலத்திற்கு எதிர்ப்பானவர் என்ற ஒரு தவறான கருத்தை இந்த சட்டமன்றத்திலே பதிவு செய்துள்ளார். முதன்முதலில் மொழிவாரி மாநிலம் பிரச்சினை வரும்போது, அண்ணல் அம்பேத்கர் மாறுபட்ட கருத்தை உடையவராக இருந்தார். பிறகு STATE REORGANISATION COMMISSION, அதாவது பொட்டி ஸ்ரீராமுலு அவர்கள் உண்ணாவிரதம் இருந்து இறந்தபிறகு, ஜவஹர்லால் நேரு STATE REORGANISATION COMMISSION BASED ON LINGUISTIC LINES, அதாவது மொழிவாரி மாநிலம் அமைப்பதற்கு கமிஷன் அமைத்தபின், அந்தக் கமிஷனுடைய REPORT–ஐ முழுமையாகப் படித்தவர் அண்ணல் அம்பேத்கர். "முழுமையாக நான் மொழிவாரி மாநிலத்திற்கு ஆதரவு தெரிவிக்கிறேன்" என்று கூறியபிறகு (மேசையைத் தட்டும் ஒலி), அப்போது ஊடகவியலாளர்கள் அண்ணல் அம்பேத்கரிடம் கேட்கிறார்கள்.

"முன்னால் நீங்கள் இந்த மொழிவாரி மாநிலத்திற்கு எதிர்ப்பாக இருந்தீர்கள். இப்போது ஆதரவு தெரிவிக்கிறீர்களே, இந்த நிலைப்பாட்டினுடைய மாற்றம் என்ன?" என்று கேட்டபோது, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்; "நான் படித்தவன், பகுத்தறிவுச் சிந்தனை உள்ளவன், STATE REORGANISATION COMMISSION–னுடைய நியாயங்களை உள்வாங்கி, அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அவ்வாறு சொல்லும்போது, CONSIS TENCY IS A CHARACTER OF AN ASS, அதாவது கழுதையுடைய நிலைப்பாடுதான் பிடிவாத குணத்தோடு இருக்கும். நான் மனிதன்; பகுத்தறிவுச் சிந்தனை உள்ளவன்; (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதனால் முழுமையாக மொழிவாரி மாநிலத்திற்கு நான் ஆதரவு தெரிவிக்கிறேன்'' என்று அண்ணல் அம்பேத்கர் பல்வேறு சபைகளில் சொல்லியதை நான் இங்கே பதிவு செய்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## நே.சிற்றரசு – தயாநிதி மாறன் எம்.பி. – அன்பகம் கலை – நா.எழிலன் – மா.பா.அன்புதுரை பங்கேற்பு!

# 117 'அ' வட்டக் கழகம் சார்பில் தண்ணீர் பந்தல்!

## வட்டச் செயலாளர் தேனா எல்.தவமணி அறிக்கை!

சென்னை, ஏப்.16-

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 117 'அ' வட்டத்தில் தண்ணீர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதுகுறித்து வட்டச் செயலாளர் எல்.தவமணி அறிக்கை வருமாறு :-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 117 வது 'அ' வட்ட கழகம் சார்பாக தமிழக முதல்வர் ஆணைக்கினங்க, மக்களின் தாகம் தீர்க்க தண்ணீர் பந்தல் அமைத்தல். உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., கழக இனண அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி கழக செயலாளர் மா.பா.அன்புதுரை, தலைமை கழக வழக்கறிஞர் கே.ஜே.சரவணன், தொகுதி பொறுப்பாளர் வெ.கௌதமன், மாமன்ற உறுப்பினர் பி.திருமலை ஆகியோர் இன்று (16.04.2025 - புதன்கிழமை) காலை 9.30 மணியளவில் அண்ணா சாலை விஜயராகவா சாலை சந்திப்பில் தண்ணீர் பந்தல் திறக்க வருகை தர இருக்கின்றனர்.

இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துனண அமைப்பாளர்கள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கழகத் தோழர்கள், மகளிர் அணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 117 'அ' வட்ட கழக செயலாளர் தேனா எல்.தவமணி அறிக்கை விடுத்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றியஇளைஞரணி சார்பாக புள்ளிலயன் ஊராட்சியில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் டேவிட்(ஏ)நாவலன் ஏற்பாட்டில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் கோடை வெப்பத்திலிருந்து மக்களை காக்கும் வகையில் நீர் மோர் பந்தலை ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ் திறந்து வைத்தார். உடன் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் தங்கமணி திருமால்,புழல் ஒன்றிய துணை செயலாளர் முருகன்,முன்னால் ஒன்றிய செயலாளர் நா.ஜெகதீசன் மற்றும் பெ.சரவணன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் செ.யுவராஜ்,கிளை செயலாளர் G. தினேஷ், டில்லிபாபு, சாக்ரடீஸ், பாஸ்கர் மற்றும் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணிமாறன், குறளரசன், பிரேம், அஸ்வின், மற்றும் ஆகியோர் முன்னிலை வகித்தனர், மற்றும் கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## தி.மு.க. மருத்துவ அணி

# நாகை மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நாகை மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட டாக்டர் சி.முகுந்தன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, ஏற்கனவே மாவட்ட மருத்துவ அணித் தலைவராக பணியாற்றி வரும் டாக்டர் எஸ். பால்ராஜ், எம்.பி.பி.எஸ்., டி.டியாப், எஃப் டயாப் (இராமநாயக்கன் குளத் தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம்) அவர்கள் நாகை மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை18.
நாள்: 15.04.2025.

**டாக்டர் எழிலன் நாகநாதன்,**
செயலாளர்,
தி.மு.க. மருத்துவ அணி.

## மண்டல வாரியாக தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்!

### மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

முதலமைச்சர்– கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரியில் நடந்த மாணவர் அணியை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினைத் தொடர்ந்து, "மண்டல வாரியாக மாவட்ட அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்";

17.04.2025 அன்று காலை 9.30 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் முன்னிலையில், சென்னை, தேனாம்பேட்டை, அண்ணா சாலை, "அன்பகத்தில்" சென்னை கிழக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை வடக்கு, சென்னை மேற்கு, சென்னை தெற்கு, சென்னை தென்மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய, காஞ்சிபுரம் வடக்கு ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டமும்;

18.04.2025 அன்று காலை 9.30 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், ஜெ.வீரமணி ஆகியோர் முன்னிலையில், தஞ்சை மத்திய மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, தஞ்சாவூர் வடக்கு, தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் மத்திய, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர், அரியலூர், திருவாரூர், திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

மேற்கண்டவாறு நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில், அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட, மாநகர மாணவர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்வதோடு, கூட்டத்திற்கு வரும் அமைப்பாளர்கள் தத்தமது அமைப்பின் நடவடிக்கைக் குறிப்பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டுவர வேண்டும்

அத்துடன், இதுவரைசெய்தசெயல்திட்டங்கள்குறித்தபுகைப்படத்தொகுப்புகளை அவசியம் கொண்டுவர வேண்டும். அத்துடன் கல்லூரிகள் கட்டமைப்பின் தகவல்களையும் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை18.
நாள்: 15.04.2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.




மாவட்ட சிறுபான்மையினர் உரிமைபிரிவு துணை அமைப்பாளர் தீபக் மகள் பிறந்தநாள் விழா ஆலந்தூரில் நடைபெற்றது. இதில் மாவட்ட இளைஞர் அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், உடன் கலாநிதி, கார்த்திக், சுலைமான், உதயா, வாசிம், சண்முகம், திலீப், தீனா, பிரபு, கவி குமார், விஜி, மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.